[2002 அக்டோபர் 30

86—

பயிற்சி நிலையம்

***13182—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தரமணியிலுள்ள இந்திய ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தின் பணி முடிவடைந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தரமணியிலுள்ள இந்திய ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தினுடைய கட்டடப் பணிகள் நிறைவடைந்து, திறக்கும் நிலையிலே உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது திறக்கும் நிலையிலே உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைத் திறப்பதற்கு நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு ஏற்கெனவே திறந்து வைத்துவிட்டோம். எனவே, திறக்கும் நிலையிலே இல்லை, திறக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு அந்தப் பயிற்சி நிலையத்திலே சேருவதற்கு இப்போது மாணவர்களுக்கு என்ன தகுதிகள் நிர்ணயித்திருக்கிறோம், அப்படி எத்தனை மாணவர்களுக்கு ஆண்டுக்கு பயிற்சி அளிக்க இருக்கிறோம், அப்படிப் பயிற்சி அளிக்கப்படுகிற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதாவது வழங்குகிறதா, அப்படியானால், எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது, அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயிருக்கிற இந்த ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்காகத், தமிழ்நாட்டிற்காக ஏதாவது தனி விகிதாச்சாரம் இந்த அரசு கேட்டிருக்கிறதா என்பது போன்ற விவரங்களைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான

2002 அக்டோபர் 30]

கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 27-7-2002 அன்று மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. காசி ராம் ராணா அவர்கள் இந்நிறுவனத்தைத் தொடங்கி வைக்க வருகை தந்தார்கள். ஆனால், அன்று பாரத துணை ஜனாதிபதி மறைவினை முன்னிட்டு, அந்த கட்டடத் திறப்பு விழா தள்ளி வைக்கப்பட்டது என்பது இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே, பின் ஒரு தேதியிலே அதைத் திறந்து வைக்கலாம் என்று நாங்கள் அனைவரும் அங்கிருந்து வந்துவிட்டோம். ஆகையால்தான் வேறு ஒரு தேதியில் அந்தக் கட்டடத்தைத் திறக்க இருப்பதாக அறிவித்து இருக்கிறோம். 1995 ஆம் ஆண்டில் மத்திய அரசு எடுத்த முடிவின்படி புதுடெல்லிக்கு வெளியிலே NIFT அமைப்பதற்கு எந்த மாநிலம் முன்வருகின்றது எனக் கேட்டபோது, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 1995 ஆம் ஆண்டு இந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இந்த NIFT கல்லூரியிலே, தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கழகத்தின் இந்தக் கல்லூரியிலே ஆடை அலங்கார வடிவமைப்பு பட்டயப் படிப்பு, உபகரணங்கள் வடிவமைப்பு பட்டயப் படிப்பு, ஆயத்த ஆடைகள் உற்பத்திக்கான தொழில்நுட்ப மேல் பட்டயப் படிப்பு. பின்னலாடை வடிவமைப்பு தொழில்நுட்ப மேல் பட்டயப் படிப்பு, ஆடை அலங்காரம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பட்டய மற்றும் இளங்கலைப் பட்டப் படிப்பு ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே சுமார் 225 மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆகவே, அன்றைக்குத் திறந்து வைத்துத்தான் அங்கே சொன்னார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் நான் கேட்டது, அந்த மாணவர்களுக்குப் பயிற்சி நேரத்திலே ஏதாவது உதவித் தொகை அளிக்கிறோமா, சேர்க்கைக்காகத் தமிழ்நாட்டிற்கு என்று ஏதாவது தனி சதவிகிதம் நாம் கேட்டிருக்கிறோமா; பெற்றிருக்கிறோமா; அப்படி அளிக்கப்படுகிறதா? இதுவரையில் உலக நாடுகளுடன் போட்டி போடுகிற அளவிற்கு எத்தனை வகையான ஆடை அலங்காரப் பயிற்சிகள் அங்கே

அளிக்கப்பட்டு இருக்கின்றன போன்ற விவரங்களைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வியாகப் போட்டால், பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வைதியலிங்கம், திறந்து வைத்ததற்குப் பிறகு பாருங்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்தல்....

முற்பகல் 11-25

2. தகவல் கோரல்

(அ) முகையூரில் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட பொதுக் குழுக் கூட்டம்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று விழுப்புரம் மாவட்டம், முகையூரிலே....

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். 25-10-2002 அன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் இருங்கள். திரு. மணி சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று விழுப்புரம் மாவட்டம், முகையூரிலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாவட்ட பொதுக் குழுக் கூட்டம்....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS